# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:.......................................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வினாப்பொருளை உணர்த்தி வரும் எழுத்து

அ) எ ஆ) ஆ

இ) ஓ ஈ) ஏ

2. உயிர்மெய், ஆய்த எழுத்துகள்

அ) சார்பெழுத்துகள் ஆ) நெட்டெழுத்துகள்

இ) உயிர்மெய்யெழுத்துகள் ஈ) மெய்யெழுத்துகள்

3. இமயத்தில் விற்கொடி பொறித்த மன்னன்

அ) நெடுஞ்சேரலாதன் ஆ) இளங்கோ

இ) நெடுஞ்செழியன் ஈ) கரிகாலன்

4. காவிரியை இள மங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள்

இ) கபிலர் ஈ) முடியரசன்

5. சொல்லின் இறுதியில் வரும் மெல்லின மெய் எழுத்துகள்

அ) ன், ஞ், ங் ஆ) ஞ், ங், ந்

இ) ண், ம், ன் ஈ) ம், ந், ங்

6. வாழ்க! தமிழ்மொழி - இச்சொல்லியம்

அ) விருப்பு ஆ) வியங்கோள்

இ) வினா ஈ) செப்பு

7. பஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றுக்கும் இடையே இருந்த நாடுகள்.

அ) 49 ☐ ஆ) 25 ☐

இ) 39 ☐ ஈ) 40 ☐

8. சிலப்பதிகாரத்தில் தென்னவன் என அழைக்கப்படும் மன்னவன்

அ) சேரன் ☐ ஆ) சோழன் ☐

இ) பாண்டியன் ☐ ஈ) பல்லவன் ☐

9. தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் நின்று பொருள் தரும் சொல்

அ) உண் ☐ ஆ) தங்கை ☐

இ) காற்று ☐ ஈ) படி ☐

10. 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற பாவலர்களுள் ஒருவர்

அ) கண்ணதாசன் ☐ ஆ) கபிலர் ☐

இ) கம்பர் ☐ ஈ) ஔவையார் ☐

11. காரணம் தெரியாமல் குறியீடாக வழங்கி வரும் பெயர்

அ) இடுகுறிப்பெயர் ☐ ஆ) காரணப்பெயர் ☐

இ) காரண இடுகுறிப்பெயர் ☐ ஈ) தொழிற்பெயர் ☐

12. புறத்திணை நூல்

அ) அகநானூறு ☐ ஆ) முல்லைப்பாட்டு ☐

இ) குறிஞ்சிப்பாட்டு ☐ ஈ) புறநானூறு ☐

13. ஈரான், ஈராக் நாடுகளின் முன்னைய பெயர்

அ) மெசப்பத்தோமியா　　ஆ) மொகஞ்சதாரோ

இ) மொறிசியசு　　ஈ) தியூனியன்

14. படித்து முடித்தான். இதில் படித்து என்பது

அ) பெயரெச்சம்　　ஆ) வினையெச்சம்

இ) குறிப்புவினை　　ஈ) வினைமுற்று

15. நான் தாயகத்தில் துயிலும் இல்லங்களைப் பார்த்தேன். இச் சொல்லியத்தில் உள்ள வேற்றுமை உருபுகள்

அ) அது, ஐ　　ஆ) ஆல், கு

இ) இல், இன்　　ஈ) இல், ஐ

16. ஓர் எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் வருவது

அ) முக்காற்புள்ளி　　ஆ) முற்றுப்புள்ளி

இ) அரைப்புள்ளி　　ஈ) காற்புள்ளி

17. "இளையோர் சூடார் வளையோர் கொய்யார்" எனும் பாடல் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு　　ஆ) புறநானூறு

இ) திருக்குறள்　　ஈ) தொல்காப்பியம்

18. என் + நெய்

அ) என்நெய்　　ஆ) எண்நெய்

இ) எண்ணெய்　　ஈ) எண்ணை

19. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

அ) புற்று ☐ ஆ) மரபு ☐

இ) சோறு ☐ ஈ ) சால்பு ☐

20. செவ்வந்திப் பொழுது எனக்குறிப்பிடப்படுவது

அ) நண்பகல் ☐ ஆ) காலை ☐

இ) சாயுங்காலம் ☐ ஈ ) யாமம் ☐

21. உழையர் எனப்படுவோர்

அ) பணியாட்கள் ☐ ஆ) நடனப்பெண்கள் ☐

இ) வீரர் ☐ ஈ ) பாடுவோர் ☐

22. எதிர்மறைவினை

அ) உண்பேன் ☐ ஆ) குடிப்பேன் ☐

இ) கேட்பேன் ☐ ஈ ) கேளேன் ☐

23. செயப்படுபொருள் குன்றியவினை

அ) சாப்பிட்டேன் ☐ ஆ) ஓடினேன் ☐

இ) படித்தேன் ☐ ஈ ) எடுத்தேன் ☐

24. சேரமானின் வாளுக்குச் சூட்டப்பட்ட மாலை

அ) வஞ்சிமாலை ☐ ஆ) கரந்தைமாலை ☐

இ) உழிஞைமாலை ☐ ஈ ) வெட்சிமாலை ☐

25. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

அ) நூற்றுநாற்பத்தேழு ☐ ஆ) நூறு ☐

இ) இருபது ☐ ஈ) பதினெட்டு ☐

26. கொண்டல்கள் எனக் கூறப்படுபவை

அ) குவளைகள் ☐ ஆ) மயில்கள் ☐

இ) வண்டுகள் ☐ ஈ) முகில்கள் ☐

27. மதுரையில் கழகம் அமைத்துத் தமிழை வளர்த்தவர்

அ) பாண்டியர் ☐ ஆ) பல்லவர் ☐

இ) சோழர் ☐ ஈ) சேரர் ☐

28. மருத நிலத்தில் நாட்டிய மங்கையராக நடனமாடுபவை

அ) குயில்கள் ☐ ஆ) கிளிகள் ☐

இ) முகில்கள் ☐ ஈ) மயில்கள் ☐

29. பெருந்துயருடன் வேங்கை மரத்தின் கீழ் வந்து நின்ற பெண்

அ) கோமகள் ☐ ஆ) கண்ணகி ☐

இ) மாதவி ☐ ஈ) ஔவை ☐

30. படிமம் என்பது

அ) மரவகை ☐ ஆ) தெய்வச்சிலை ☐

இ) கடுஞ்சினம் ☐ ஈ) நறுமணம் ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது கீழடி எனும் சிற்றூர். இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழரது வரலாற்றை அறிய உதவுகின்றன. தமிழ் இனத்தின் தொன்மை தொடர்பான கருத்துகளை மாற்றுபவையாக உள்ளன. கிறித்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன், சங்ககாலம் தொடங்கியதாக இதுவரை கருதப்பட்டது. ஆனால், கீழடியில் நடைபெற்ற ஆய்வில் கிடைத்த சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது, சங்ககாலம் கிறித்து பிறப்பதற்கு 6 நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது என்பது உறுதியாகின்றது. அத்துடன் சிந்துவெளி நாகரிகத்திற்கும் கீழடி நாகரிகத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதும் தெரிய வருகிறது. கீழடியில் கிடைத்த கீறல்கள் கொண்ட பானை ஓடுகளை ஒத்த பானை ஓடுகள் சிந்துவெளியிலும் கிடைத்துள்ளன. அத்துடன் அணிகலன்கள், எழுத்தாணிகள், சுடுமண் பொம்மைகள், தாயக்கட்டை, சதுரங்கக்காய்கள் என்பனவும் கிடைத்துள்ளன. கீழடியில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டிருக்கின்றனர். சங்க இலக்கியப்பாடல்களில் காணப்படும் பொருட்கள் அனைத்தும் கீழடியில் கிடைத்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்களும் சங்கத்தமிழ் ஆர்வலர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

1. கீழடி ஆய்வின் பின், கழககாலம் எத்தனையாம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

2. எவை தமிழ் இனத்தின் தொன்மை தொடர்பான கருத்துகளை மாற்றுபவையாக உள்ளன?

_______________________________________________

_______________________________________________

3. இங்கு வாழ்ந்த மக்கள் எத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர்?

_______________________________________________

_______________________________________________

4. கீழடி நாகரிகத்துடன் தொடர்புடையதாக உள்ள நாகரிகம் எது?

_______________________________________________

_______________________________________________

5. வரலாற்று ஆய்வாளர்களும் கழகத்தமிழ் ஆர்வலர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவித்த செய்தி யாது?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தொகைநூல்கள் என்பதிலிருந்து நீர் புரிந்து கொண்டது என்ன ?

______________________________________________

______________________________________________

2. "வேரல் வேலி வேர்க்கோள் பலவின்" இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூலின் பெயரைத் தருக.

______________________________________________

3. மட்டக்களப்பு எத்தகைய வளங்களைக் கொண்டது? (இரண்டு மட்டும்)

______________________________________________

______________________________________________

4. எதைக் காப்பது நமது கடமை என கண்ணதாசன் கூறுகின்றார்?

______________________________________________

______________________________________________

5. சிந்துவெளி, சுமேரிய நாகரிகங்கள் எவ்வாறு தோன்றின?

______________________________________________

______________________________________________

6. கடற்கோளின் போது குமரிக்கண்டத்திலிருந்து பிரிந்த பெரும் நிலப்பரப்புகள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

7. கண்ணகி, கோவலன் கதையைச் செங்குட்டுவனுக்கு எடுத்துரைத்த புலவர் யார்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

4. **கீழுள்ள கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதுக.**

அமிழ்தினும் இனிய நம் மொழி
ஆண்டாண்டுகளாய் வாழும் மொழி

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. மெய்யெழுத்துகள் ஒலி அடிப்படையில் எத்தனை வகைப்படும்? அவை எவை?

______________________________________________

2. கீழுள்ள பேச்சுவழக்குச் சொற்களை செவ்வழக்காக மாற்றி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பாவக்காய் | __________ | குடுத்தேன் | __________ |
| விளாடினான் | __________ | வாறேன் | __________ |
| எப்பவும் | __________ | தேத்தண்ணி | __________ |

3. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் வேற்றுமை ஏற்ற சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் கண்டறிந்து எழுதுக.

தமிழரது வீரம் பற்றிப் புறநானூறு கூறுகிறது.
தஞ்சைப்பெருங்கோவிலைக் கட்டியவன் இராசராசசோழன்.
சங்கிலி மன்னன் வன்னியத்தேவனால் காட்டிக்கொடுக்கப்பட்டான்.

| வேற்றுமை ஏற்றசொல் | வேற்றுமை உருபு |
|---|---|
| __________ | __________ |
| __________ | __________ |
| __________ | __________ |

4. பின்வரும் சொல்லியங்களின் ஆகுபெயர்களை எழுதுக.

அ) திருவிழாவிற்கு ஊரெல்லாம் திரண்டு வந்தது. __________
ஆ) நண்பர்கள் பொங்கல் உண்டனர். __________
இ) உழவர் நெல் அறுவடை செய்தனர். __________

5. ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

| | | |
|---|---|---|
| படர்க்கை | __________ | __________ |
| உரிச்சொல் | __________ | __________ |
| குறிப்புவினை | __________ | __________ |

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

இலங்கையின் தொன்மையான மக்கள் தமிழர். எல்லாளன், சங்கிலியன், கயிலைவன்னியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்கள் நல்லாட்சி செய்தனர். ஐரோப்பியர்கள் இலங்கையைக் கைப்பற்றி தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். இறுதியாக ஆண்ட ஆங்கிலேயர், ஆட்சியைச் சிங்களவரிடம் ஒப்படைத்தனர். சிங்களவரின் ஆட்சியின் போது தமிழர்கள் தமது வாழ்வுரிமைகளை இழக்கத் தொடங்கினர். இறுதியில் தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி, வெவ்வேறு நாடுகளில் பரந்து வாழும் நிலை உருவாகியது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- ✸ கடல் கொண்ட தமிழகம்

- ✸ முள்ளிவாய்க்காலும் ஈழப்போரும்

- ✸ சூழல் மாசடைதல்

  - ➢ சூழல் மாசடைதல் என்றால் என்ன?
  - ➢ சூழல் எதனால் மாசுபடுகின்றது?
  - ➢ அதனால் ஏற்படும் தீமைகள்.
  - ➢ அதைத் தடுக்கும் வழிகள்.

புள்ளிகள் 20